# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

8082000

08/AC/2023

1. District மாவட்டம் : நாமக்கல் PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் நாமக்கல் Year: 2023 ஆண்டு FIR No.: மு.த.அ. எண் Date: 04.09.2023 நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: in 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 17.08.2023-ம் தேதி காலை சுமார் 11.00 மணி முதல்
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 02.09.2023-ம் தேதி காலை சுமார் 11.45 மணி வரை.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.09.2023 Time நேரம் 13.00 மணி.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.09.2023 Time நேரம் 09.30 மணி.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ. தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், சர்க்கார் கொந்தளம் கிராமம், பரமத்திவேலூர், நாமக்கல் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.ரங்கநாதன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் லேட் ராமசாமி கவுண்டர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 40 (d) Nationality : நாட்டினம் இந்தியா. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம்/ சாய தொழில் (g) Address : முகவரி கதவு எண்.4/388, பொத்தியகாடு, நெட்டையம்பாளையம், சர்க்கார் கொந்தளம் (PO) பரமத்தி வேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திருமதி. தீபா, கிராம நிர்வாக அலுவலர், சர்க்கார் கொந்தளம் கிராமம், பரமத்தி வேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   இல்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது!

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [illegible]

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[illegible] 4/9/2023

15. Date & Time of despatch to the court 4.9.2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04/09/2023 at 10:30 Hrs.

Name பெயர் M.நல்லம்மாள்,
Rank நிலை .................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.ந.க.பிரிவு,
நாமக்கல்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.08/AC/2023 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

02.09.2023-ஆம் தேதி சனிக்கிழமை பகல் 13.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, திரு.R.ஜெகநாதன், (வயது-40), S/o. லேட். ராமசாமி கவுண்டர், கதவு எண்.4/388, பொத்தியகாடு, நெட்டையம்பாளையம், சர்க்கார் கொந்தளம் (Po), பரமத்தி வேலூர் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் என்பவர் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி வாய் மொழியாக சொன்ன புகாரை அலுவலக கணினியில் பதிவு செய்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

நான் நெட்டையம்பாளையம் பொத்தியகாட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமாக பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து சுமார் 4 ஏக்கர் விவசாய நிலம் சர்க்கார் கொந்தளம் கிராம சர்வே எண். 329/10-B-ல் உள்ளது. எனது அப்பா கடந்த 2005-ல் இறந்துவிட்டார். அதன் பின்னர் எனது நிலத்திற்கான பட்டாவில் எனது பெயர், எனது அம்மா பழனியம்மாள் பெயர் மற்றும் எனது அக்கா விஜயலட்சுமி பெயர் வாரிசு உரிமைப்படி சேர்க்கப்பட்டது. பின்னர் குடும்ப சூழ்நிலை காரணமாக அதில் ஒரு பகுதியை எனது அக்கா கணவர் செல்வாராஜு அவர்களுக்கு கிரையம் செய்தோம். அப்போது அவர் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டது. பின்னர் அவரிடமிருந்து அந்த நிலத்தை எனது பெயருக்கே கிரையம் செய்து கொடுத்துவிட்டார். மேலும் எனது மனைவி கீதாராணி மற்றும் மாமனார் செல்வராசு ஆகியோர் பெயர்களிலும் ஒரு பகுதி நிலத்தை கிரையம் செய்து வைத்தேன். அதனால் அவர்களது பெயர்களும் அந்த நிலப்பட்டாவில் சேர்க்கப்பட்டது. அதே சமயத்தில் மனோஜ்குமார் என்பவருக்கு ஒரு பகுதி நிலத்தை விற்பனை செய்தேன். அதனால் அவர் பெயரும் பட்டாவில் சேர்க்கப்பட்டது. எனது மனைவி கீதாராணி மற்றும் மாமனார் செல்வாரசு ஆகியோர் பெயர்களில் உள்ள சொத்துக்கள் எனது பெயருக்கே திரும்ப தானசெட்டில்மெண்ட் செய்து வைத்துவிட்டார்கள். என்னிடமிருந்து நிலம் வாங்கிய மனோஜ்குமார் வேறு நபர்களுக்கு விற்றுவிட்டார். மேலும் அவர்கள் அந்த நிலத்தை தனியாக உட்பிரிவு செய்துகொண்டார்கள். கிணறு பொது என்பதால் தற்பொழுது நிலம் வைத்துள்ள தருண் மற்றும் சிவகாம சுந்தரி ஆகியோர் பெயர் எனது பட்டாவில் உள்ளது. மேற்படி சர்வே

எண்.329/10B நிலத்திற்குரிய பட்டா எண்.555 இல் தற்பொழுது எனது பெயர் உட்பட 9 நபர்கள் பெயர்கள் உள்ளது. எனது அம்மா மற்றும் அக்கா ஆகியோர்களுக்கு உரிய பங்கை எனது பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி கொடுக்கிறேன் என்று சொன்னதால் அதற்காக ஆவண எழுத்தரை பத்திரம் தயார் செய்ய சொன்னேன். அவர் மேற்படி நிலத்தில் உரிமையில்லாத செல்வராஜ், மனோஜ்குமார், செல்வராசு மற்றும் கீதாராணி ஆகியோர் பெயர்களை பட்டாவில் இருந்து நீக்கம் செய்து பட்டா பெற சொன்னார். ஆகையால் 17.08.2023-ஆம் தேதி சர்க்கார் கொந்தளம் வி.ஏ.ஓ. திருமதி.தீபா அவர்களை காலை சுமார் 11 மணியளவில் அவாது அலுவலகத்தில் எனது நில ஆவணங்களுடன் சந்தித்து இதுகுறித்து கேட்டேன். அவர் ஆன்லைனில் அப்ளை செய்ய வேண்டும், ஆவணங்களை என்னிடமே கொடுத்துவிடுங்கள் நானே அப்ளை செய்துவிடுகிறேன் என்று சொல்லி என்னிடமிருந்து பத்திரங்கள், கம்ப்யூட்டர் சிட்டா, EC ஆகியவற்றை வாங்கிக்கொண்டார். மேலும் பட்டாவில் பெயர் நீக்கம் செய்து கொடுக்க தனக்கு ரூ.30,000/- கொடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் இவ்வளவு பணம் கேட்கிறீங்களே என்று சொன்னதற்கு, சரி ரூ.25,000/- கொடுத்துடுங்க வேலையை முடித்து கொடுத்து விடுகிறேன் என்று சொன்னார். என்னிடமிருந்து ஆவணங்களை பெற்று அன்றைய தினமே எனது பெயரில் ஆன்லைனில் அப்ளை செய்துவிட்டார். அதற்காக எனது செல்போனிற்கு 17.08.2023-ஆம் தேதி மாலை 4.03 மணிக்கு மெசேஜ் வந்தது. அந்த ஆன்லைன் விண்ணப்ப எண்.2023/0103/09/355914 ஆகும். அதன் பின்னர் கடந்த 19.08.2023-ஆம் தேதி முதல் பலமுறை வி.ஏ.ஓ. திருமதி.தீபா அவரது செல்போன் எண்.8012379487 மூலம் எனது செல்போன் எண்.9994591188 இல் தொடர்பு கொண்டு கேட்ட பணத்தை கொண்டு வந்து கொடுத்தால் எனது ஆன்லைன் விண்ணப்பத்தை approval செய்து அனுப்புவதாக தெரிவித்தார். எனக்கு பணம் கொடுக்க விருப்பமில்லை, ஆகையால் என்னால் பணம் ரெடிசெய்ய முடியவில்லை என்று சொல்லி வந்தேன். 31.08.2023 தேதி காலை 8 மணியளவில் எனக்கு போன் செய்துள்ளார். நான் வீரப்பூர் கோவிலுக்கு சென்றுவிட்டு வந்து தூங்கிக் கொண்டிருந்ததால் போனை எடுக்கவில்லை, ஆகையால் எனது மனைவி செல்போன் எண்.9943859597-க்கு காலை சுமார் 08.05 மணிக்கு போன் செய்து என்னை அலுவலகம் வரச்சொன்னார். பின்னர் சுமார் 12.30 மணி சுமாருக்கு நான் சர்க்கார் கொந்தளம் வி.ஏ.ஓ. அலுவலகம் சென்று வி.ஏ.ஓ. திருமதி.தீபா அவர்களை பார்த்தேன்.

அப்போது அவர் பணம் கொடுக்கலனா நான் எப்படி அப்ரூவல் போடமுடியும் என்று சொன்னார். நான் தற்பொழுது கையில் பணம் இல்லை என்று சொன்னேன். பணம் ரெடி பண்ணிட்டு நாளைக்கு வாங்க என்று சொன்னார். 01.09.2023 தேதி காலை 8.00 மணிக்கு எனக்கு வி.ஏ.ஓ. தீபா போன் செய்தாங்க, நான் கட் பண்ணிட்டேன். திரும்ப நான் கூப்பிட்டேன் அவர்கள் எடுக்கவில்லை. 01.09.2023 தேதி மதியம் 1.15 மணியளவில் நான் கொந்தளம் டீக்கடைக்கு போனபோது அங்கு இருந்த வி.ஏ.ஓ. தீபா என்னை ஆபீஸ் போங்க நான் வரேன் என்று சொன்னார். நான் வி.ஏ.ஓ. ஆபீஸ் போனேன். பின்னர் அங்கு வந்த வி.ஏ.ஓ. தீபா, என்னிடம் பணம் கொண்டுவரலையா என்று கேட்டார். நான் 25,000 ரூபாய் என்னால ரெடி பண்ணமுடியவில்லை, நீங்க அப்ரூவல் பண்ணுங்க பணம் ரெடியான உடனே கொடுக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு முழு பணமும் கொடுத்தால் அப்ரூவ் பண்றேன் இல்லைனா கேன்சல் பண்ணிடறேன். என்றும் இன்னைக்கு சாயந்திரத்திற்குள் பணம் ரெடி பண்ணுங்க என்று சொன்னார். அதற்கு நான் பார்க்கிறேன், இல்லை என்றால் திங்கட்கிழமை ரெடிபண்ணிட்டு வரேன் என்று சொன்னேன். பின்னர் 01.09.2023 தேதி மாலை 5.24 மணிக்கு எனக்கு போன் செய்தார். நான் போன் எடுப்பதற்குள் கட் ஆகிவிட்டது. திரும்பவும் உடனே அவர்களை கூப்பிட்டேன். அப்போது பணம் ரெடியாகிடுச்சா எப்ப கொண்டு வர்ரீங்க என்று கெட்டார். நான் பணம் ரெடியாகவில்லை என்று சொன்னேன். பணம் ரெடிபண்ணிட்டு கூப்பிடுங்க என்று சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டேன். பின்னர் 02.09.2023-ம் தேதி நான் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த போது காலை சுமார் 11.23 மணிக்கு வி.ஏ.ஓ. தீபா எனக்கு போன்செய்து தான் ஆபீஸ் வந்திருப்பதாகவும், நேரில் ஆபீஸ் வாங்க என்று சொன்னார். நான் சுமார் 11.45 மணிக்கு வி.ஏ.ஓ. ஆபீஸ் போனேன். அப்போது வி.ஏ.ஓ. தீபா ஆபீஸில் அமர்ந்திருந்தார். நான் அலுவலகத்திற்குள் சென்றவுடன் வாங்க என்று சொல்லிவிட்டு போனை இங்கேயே டேபிள் மேலே வைத்துவிட்டு வாங்க என்று வெளியில் சென்றார். நானும் போனை அலுவலக டேபிள் மீது வைத்துவிட்டு அலுவலகத்திற்கு வெளியில் வந்தேன். வேப்பமரத்தடியில் நின்றுகொண்டு வி.ஏ.ஓ. தீபா என்னிடம் பணம் கொண்டு வந்தீங்களா என்று கேட்டார். நான் பணம் ரெடிபண்ணமுடியல என்று சொன்னேன். அதற்கு அவர் உங்களுக்குதான் பத்திரம் பதிவுசெய்ய பட்டா தேவை, நீங்கதான் வெயிட் பண்றீங்க, பணம் கொடுத்தால் உடனே அப்ரூவல் செய்து அனுப்பி விடுகிறேன் என்று

சொன்னார். எனக்கு பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால், நான் அவரிடம் எனது விண்ணப்பத்தை அப்ரூவ் பண்ணுங்க, பணம் ரெடியான உடனே கொடுக்கிறேன் என்று சொன்னேன். ஆனால் அதற்கு வி.ஏ.ஓ. மதியம் வரை இருப்பேன் போய் பணம் கொண்டுவாங்க, முழு பணமும் கொண்டு வாங்க ரொம்ப நாள் பெண்டிங் இருக்கு, உங்க வேலையை இன்று முடித்துவிடுகிறேன், பணம் ரெடிபண்ணிட்டு போன் பண்ணுங்க என்று சொன்னார். பணம் ரெடியானா கொண்டு வருகிறேன், இல்லை என்றால் திங்கட்கிழமை கொண்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எனக்கு சர்க்கார் கொந்தளம் வி.ஏ.ஓ. தீபா அவர்களுக்கு லஞ்சமாக ரூ.25,000/- பணம் கொடுத்து எனது பட்டாவில் பெயர் நீக்கம் செய்ய விருப்பமில்லாததால், நாமக்கல் இலஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து புகார் வாக்குமூலம் கொடுக்கிறேன். இன்று காவல் ஆய்வாளர் அவர்கள் என்னிடம் நடந்த விபரங்களை கேட்டு கணினியில் பதிவு செய்தார். படித்துப் பார்த்தேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது. இப்படிக்கு (ஒப்பம்/-(xxxxx R.Jeganathan) 2.9.2023. சாட்சி: (ஒப்பம்/-(xxxxx S.Geetharani, 2/9/2023, W/o.R.Jeganathan)

மேற்கண்ட புகார் வாக்குமூலம் குறித்து காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களிடம் தெரிவித்து, வாய்மொழி ஒப்புதல் பெற்று புகார் வாக்குமூலத்தை படித்துப் பார்த்து, புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், வழக்கின் எதிரி திருமதி.தீபா, கிராம நிர்வாக அலுவலர், சர்க்கார் கொந்தளம் கிராமம், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்பவருக்கும் புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 04.09.2023-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 09.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.08/AC/2023, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் வாக்குமூலம் ஆகியவற்றை மாண்பமை தனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(M. நல்லம்மாள்) 04/09/2023
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.